सत्यमेव जयते
न्याय विभाग
Department of Justice
भारत सरकार
Government of India

# அரசியல் சட்ட தினம் & குடிமக்களின் கடமைகள்

## 26 நவம்பர் 2019 – 26 நவம்பர் 2020




"அரசியல் சட்டம் அரசால் பின்பற்றப்படும் ஆவணமாக மட்டும் இருந்தால் ஜனநாயகம் பாதிக்கப்படும். எனவே அதனை அடித்தளம் வரை கொண்டு செல்வது அவசியமாகிறது."

நரேந்திர மோடி
பிரதமர்

## இந்திய அரசியல் சட்டம்

- இந்திய அரசியல் சட்டம் அடிப்படை சட்டமாகும். இது நமது நாட்டின் அரசியல் கட்டுமானத்தின் அடிப்படையை அமைக்கிறது. இது நாடாளுமன்ற ஜனநாயகத்தையும், கூட்டமைப்புடன் குடியரசையும் நிறுவுகிறது.
- நமது ஸ்தாபகர்களின் தொலைநோக்குப் பார்வையையும், மாண்புகளையும் உள்ளடக்கியது இந்திய அரசியல் சட்டம். இது அவர்களின் சமூக, அரசியல், பொருளாதார அடிப்படை, நம்பிக்கை, விருப்பம் ஆகியவற்றை பிரதிபலிக்கிறது
- நிர்வாகம், சட்டம் இயற்றும் அமைப்புகள், நீதித்துறை ஆகிய இந்தியக் குடியரசின் முக்கிய அங்கங்களையும் அவற்றின் அதிகாரங்களையும் விளக்கும் அரசியல் சட்டம் அவற்றின் பொறுப்புகளையும் வரையறுக்கிறது.
- இந்திய அரசியல் சட்டத்தின் முக்கிய அம்சங்கள்:
  - அரசின் நாடாளுமன்ற முறை
  - கூட்டமைப்பு
  - சமயச்சார்பற்ற அரசு
  - சுயேச்சையான நீதித்துறை
  - அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகள்
  - அரசுக் கொள்கையின் வழிகாட்டு நெறிமுறைகள்
  - குடியுரிமை
  - வயது வந்தோருக்கு வாக்குரிமை
- அமெரிக்கா, பிரிட்டன், அயர்லாந்து, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளின் அரசியல் சட்டங்களிலிருந்து ஊக்கம் பெற்று உருவாக்கப்பட்ட இந்திய அரசியல் சட்டம் உலகிலேயே மிகவும் நீளமான, விரிவான அரசியல் சட்டமாகும்.
- இந்த அரசியல் சட்டம் 395 பிரிவுகளையும், 22 பகுதிகளையும், 12 அட்டவணைகளையும் கொண்டுள்ளது.




இந்திய அரசியல் சட்ட கையெழுத்துப் பிரதியின் ஆங்கில முகப்புப் பக்கம்

**இந்த அரசியல் சட்டத்தின் மூல கையெழுத்துப் பிரதி ஆயிரம் ஆண்டுகள் நிலைத்திருக்கும் வகையில் 16x22 அங்குல அளவுடைய மை ஊறாத பழுப்பேறாத காகிதங்களில் எழுதப்பட்டுள்ளது. 251 பக்கங்களைக் கொண்ட இந்தக் கையெழுத்துப் பிரதி 3.75 கிலோ கிராம் எடையுள்ளது.**

"இந்தியர்களுக்கான மாண்பு மற்றும் இந்தியாவுக்கான ஒற்றுமை"

நரேந்திர மோடி
பிரதமர்

# அரசியல் சட்ட நிர்ணயசபையும் அரசியல் சட்ட உருவாக்கமும்

இந்திய அரசியல் சட்டம் 1946-க்கும், 1949-க்கும் இடைப்பட்ட ஆண்டுகளில் (1946 ஆம் ஆண்டு அமைச்சரவைக் குழு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட) அரசியல் சட்ட நிர்ணயசபையால் உருவாக்கப்பட்டது. இந்த சபையின் தலைவராக டாக்டர் ராஜேந்திர பிரசாத் பணியாற்றினார்.

இந்த சபையின் 299 உறுப்பினர்கள் (15 பெண்கள் உட்பட) அரசியல் சட்ட நகலை உருவாக்க 3 ஆண்டுகளுக்கும் (1946-1949) குறைவில்லாத காலத்தை எடுத்துக் கொண்டனர்.

அரசியல் சட்ட நிர்ணயசபை உறுப்பினர்கள் 1946 டிசம்பருக்கும் 1949 நவம்பருக்கும் இடையே 11 அமர்வுகளில் சந்தித்தனர்.

அரசியல் சட்டத்தின் நகல் தயாரிப்புக்கு டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் தலைமையின் கீழ் நகல் உருவாக்கக் குழுவினை அரசியல் சட்ட நிர்ணயசபை 1947 ஆகஸ்ட் 29 அன்று நியமித்தது.



அரசியல் சட்ட நிர்ணய சபைக் கூட்டம், டிசம்பர் 1946

"மதிப்பிற்குரிய பாபா சாகேப் அம்பேத்கர் அவர்களின் தலைமையின் கீழ் அனைவரையும் உள்ளடக்கிய அரசியல் சட்டத்தின் நகலை இந்தியா உருவாக்கியது. அனைவரையும் உள்ளடக்கிய இந்த அரசியல் சட்டம் புதிய இந்தியாவைக் கட்டமைக்கும் முன்னோடியாக விளங்குகிறது. இது நமக்கு சில பொறுப்புகளை வழங்கியிருப்பதோடு சில கட்டுப்பாடுகளையும் வகுத்துத் தந்துள்ளது."

நரேந்திர மோடி
பிரதமர்

"அரசியல் அமைப்புச் சட்டம் என்பது வழக்கறிஞர்களுக்கான ஆவணம் மட்டுமல்ல, அது வாழ்க்கைக்கான வழிகாட்டியாகும். அதன் உணர்வு இந்த யுகத்தின் உணர்வாகத் திகழ்கிறது."

டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்



டாக்டர் பி ஆர் அம்பேத்கர் புகைப்படம்



மத்திய அமைச்சரவை உறுப்பினர்கள், இந்திய அரசமைப்புச் சட்டத்தில் கையெழுத்திட்டனர். ராஜ்குமாரி அம்ரித் கவுர், டாக்டர் ஜான் மத்தாய் மற்றும் சர்தார் வல்லபாய் படேல் ஆகியோர் படத்தில் காணப்படுகிறார்கள்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் நவம்பர் 26, 1949 அன்று ஏற்கப்பட்டது. இது ஜனவரி 26, 1950 அன்று நடைமுறைக்கு வந்தது. 1952-ல் புதிய நாடாளுமன்றம் அமைக்கப்படும் வரை, இந்த நாளில் இருந்த அவை தாமாகவே தற்காலிக நாடாளுமன்றமாக மாற்றம் பெற்றது. அரசியல் சட்டத்தின் நகல் மீதான விவாதத்திற்கு இந்த அவையில் மொத்தம் 7635 திருத்தங்கள் முன்மொழியப்பட்டன. இவற்றில் 2473 திருத்தங்கள் விவாதிக்கப்பட்டு நீக்கப்பட்டன.

மொத்தமுள்ள 299 உறுப்பினர்களில், 284 உறுப்பினர்கள்தான் அரசியல் சாசனத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

அரசியல் சட்ட உருவாக்கத்தின் பல்வேறு பணிகளைக் கையாள்வதற்காக மொத்தம் 13 குழுக்களை அரசியல் சட்ட நிர்ணயசபை நியமித்தது. இவற்றில் 8 குழுக்கள் முக்கியமானவை மற்றவை சிறிய அளவிலான குழுக்கள்.

அரசியல் சட்ட நிர்ணயசபையின் 8 முக்கிய குழுக்களின் பெயர்கள்

- நகல் தயாரிப்புக் குழு
- மத்திய அரசு அதிகாரக் குழு
- மத்திய அரசு அமைப்புச் சட்டக் குழு
- தற்காலிக அரசு அமைப்புச் சட்டக் குழு
- அடிப்படை உரிமைகள், சிறுபான்மையினர் மற்றும் பழங்குடியினர் மற்றும் விலக்கப்பட்ட பகுதிகள் குறித்த ஆலோசனைக் குழு
- நடைமுறை விதிகள் குழு
- மாநிலங்கள் குழு
- வழிகாட்டும் குழு



24 ஜனவரி 1950 அன்று நடைபெற்ற அரசியல் சட்ட நிர்ணய சபையின் கடைசிக் கூட்டத்தில் சர்தார் வல்லபாய் படேல்.

அரசியல் சட்ட நிர்ணயசபை ஏற்பளித்த விவரம் 22 ஜூலை 1947-ல் தேசியக் கொடியை ஏற்றுக்கொண்டது. தேசிய கீதம் மற்றும் தேசிய பாடலை 24 ஜனவரி 1950-ல் ஏற்றுக்கொண்டது.

இந்திய நவீனக் கலையின் முன்னோடி திரு.நந்த்லால் போஸ், அரசியலமைப்புச் சட்டத்தின் ஒவ்வொரு பக்கத்திற்குமான விளிம்புகளை வடிவமைத்து கலையம்சங்களோடு அலங்கரித்தார். இந்திய நவீனக் கலையின் முன்னோடி திரு.நந்த்லால் போஸ், அரசியலமைப்புச் சட்டத்தின் ஒவ்வொரு பக்கத்திற்குமான விளிம்புகளை வடிவமைத்து கலையம்சங்களோடு அலங்கரித்தார்

கலை நயத்தோடு எழுதுவதில் நிபுணரான திரு.பிரேம் பிகாரி நாராயண் ராய்சாடா ஒருவராகவே தம் கைப்பட அரசியல் சட்டத்தை எழுதினார். இந்தப் பணியை முடிக்க அவர் 6 மாதம் எடுத்துக் கொண்டார். இந்தப் பணிக்கு அவர் கட்டணம் எதுவும் பெறவில்லை.



இந்திய அரசமைப்புச் சட்ட உறுப்பினர் குழுவின் புகைப்படம் 1950

## அரசியல் சட்ட நிர்ணய சபையும் அதன் முக்கியமான உறுப்பினர்களும்

அமைச்சரவைக் குழு பரிந்துரையின்படி அரசியல் சட்ட நிர்ணயசபை உறுப்பினர்கள் மாகாண சட்டப் பேரவைகளால் மறைமுகத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாகாணங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் 229 மற்றும் மாநிலங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் 70 பேருடன் இந்த சபை மொத்தம் 299 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது.

இந்த சபையின் சில முக்கியமான உறுப்பினர்கள்:


டாக்டர் ராஜேந்திர பிரசாத்
சர்தார் வல்லபபாய் படேல்
ஜவஹர்லால் நேரு
டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்
கோவிந்த் வல்லப் பந்த்
மவுலானா அபுல் கலாம் ஆசாத்
சரோஜினி நாயுடு
ராஜ்குமாரி அம்ரித் கவுர்
ஜே.பி.கிருபளானி
சி.ராஜகோபாலாச்சாரி
சரத் சந்திர போஸ்

ஆசஃப் அலி
ஷியாமா பிரசாத் முகர்ஜி
ஹன்சா மேதா
கோபிநாத் போர்டோலோய்
ஹரேந்திர கூர்மர் முகர்ஜி
பினோதானந்த் ஜா
துர்காபாய் தேஷ்முக்
ஃபிராங்க் அந்தோணி
ஜெய்பால் சிங் முண்டா
ஹர்கோவிந்த் பந்த்
ஜான் மத்தாய்

பேகம் அய்ஜாஸ் ரசூல்
கே.எம்.முன்ஷி
சர்வபள்ளி ராதாகிருஷ்ணன்
அம்மு சுவாமிநாதன்
எம்.அனந்தசயனம் ஐயங்கார்
அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்
பி.பட்டாபி சீதாராமையா
டி.பிரகாசம்
என்.சஞ்ஜீவ ரெட்டி
எஸ்.நிஜலிங்கப்பா
ஜி.வி.மவ்லாங்கர்

பதம்பத் சிங்கானியா
புருஷோத்தமதாஸ் டாண்டன்
சுசேதா கிருபளானி
ஹஸ்ரத் மொஹானி
ரஃபி அகமத் கித்வாய்
அனுகிரஹநாராயண் சின்ஹா
ஜகஜீவன் ராம்
சச்சிதானந்த சின்ஹா
சத்யநாராயண் சின்ஹா
ஸ்ரீ கிருஷ்ண சின்ஹா
சேத் கோவிந்த் தாஸ்

ஹரி சிங் கவுர்
பஞ்சாப்ராவ் எஸ்.தேஷ்முக்
ரவிசங்கர் சுக்லா
ஹரேகிருஷ்ண மஹதாப்
அன்னி மாஸ்கரேனே
ஜீவ்ராஜ் நாராயண் மேத்தா
மோட்டூரி சத்யநாராயணா
தீப் நாராயண் சிங்
சர் சயத் முகமத் சாதுல்லா
கே. காமராஜ்
பி.சுப்பராயன்



I beg to move, Sir,

"That it be resolved that:

(1) After the last stroke of midnight, all members of the Constituent Assembly present on this occasion do take the following pledge:

'At this solemn moment when the people of India, through suffering and sacrifice, have secured freedom, I, .............. a member of the Constituent Assembly of India, do dedicate myself in all humility to the service of India and her people to the end that this ancient land attain her rightful place in the world and make her full and willing contribution to the promotion of world peace and the welfare of mankind.'

(2) Members who are not present on this occasion do take the pledge (with such verbal changes as the President may prescribe) at the time they next attend a session of the Assembly."

அரசியல் சட்ட நிர்ணயசபை உறுப்பினரால் ஏற்கப்பட்ட உறுதிமொழி.

# குடிமக்களின் கடமைகளும், அடிப்படை கடமைகளும்

நமது அரசியல் சட்டத்தின் இன்றியமையாத ஓர் அம்சமாகும்



“ “உரிமை என்பது நன்றாக செய்யப்பட்ட கடமை.” ”

மகாத்மா காந்தி

நமது குடிமக்களின் கடமைகள் மற்றும் அடிப்படை கடமைகள் குறித்து மாபெரும் விழிப்புணர்வை ஏற்படுத்த இந்தியாவின் அனைத்துக் குடிமக்களையும் இந்திய அரசு அணுகுகிறது (26 நவம்பர் 2019 முதல் 26 நவம்பர் 2020 வரை).

முக்கிய நோக்கங்கள்

- அரசியல் சட்டத்திற்கும் அதில் உள்ள மாண்புகள் மற்றும் கோட்பாடுகளுக்கும் உண்மையான பாதுகாவலர்கள் இந்திய மக்கள் என்பதை வலியுறுத்துவது.
- சக குடிமக்களுக்கும் சமூகத்திற்கும் தேசத்திற்கும் செய்ய வேண்டிய கடமைகளை அனைத்துக் குடிமக்களுக்கும் நினைவூட்டுவது.
- தேசியத்தின் உணர்வில் பெருமிதம் கொள்ள குடிமக்களை ஊக்கப்படுத்துவது.
- தேசத்திற்கான உறுதிப்பாட்டையும், ஒழுக்க உணர்வையும் மேம்படுத்த உதவுவது; தேசக் கட்டுமானத்திற்கு குடிமக்களின் ஆற்றலைத் திரட்டுவது.

## குடிமக்களின் கடமைகளை அறிவோம்

- இந்திய அரசியல் சாசன சட்டத்தின் முகப்புரையை படித்து, இணைய தள உறுதிமொழியில் கையெழுத்திடுவதுடன், அதற்கான சான்றிதழை MyGov.in இணையதளம் மூலமாக உடனடியாகப் பெறுங்கள்
- MyGov.in இணையதளத்தில் ஆன்லைன் முறையில் நடத்தப்படும் அரசியல் சட்ட தின வினாடி-வினா மற்றும் கட்டுரைப் போட்டிகளில் கலந்து கொள்ளுங்கள்
- சுவரொட்டிகள், துண்டு விளம்பரங்கள் மற்றும் இதர மக்கள் தொடர்பு சாதனங்களை www.doj.gov.in இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யலாம்

““தேசத்திற்கான உங்களின் பங்களிப்புகள் கடமைகள் பற்றி சிந்திக்கவும், குறைந்தபட்சம் ஒரு முடிவாவது எடுக்கவும் நான் உங்களை வலியுறுத்துகிறேன். கடமையின் பாதையில் நடக்கும் போது 130 கோடி முயற்சிகளின் வலுவும் 130 கோடி முடிவுகளும் நாட்டிற்குப் பெரும் பங்களிப்பைச் செய்யும்.””

நரேந்திர மோடி
பிரதமர்
தூய்மை இந்தியா தினம்
2019 அன்று

@DoJ_India மற்றும் @MyGov. Join #itsmyduty ஆகியவற்றில் பின்தொடரலாம்

இந்திய அரசியல் சட்டத்தின் முழு விவரம் மற்றும் அடிப்படைக் கடமைகளை http://legislative.gov.in/constitution-of-india -ல் காணலாம்


न्याय विभाग
Department of Justice
भारत सरकार
Government of India
सत्यमेव जयते


# அடிப்படைக் கடமைகள்-முக்கியத்துவமும் சேர்க்கையும்

“ எனது கடமைகள் பற்றி என் அன்னையின் மடியில் நான் கற்றுக் கொண்டேன். அவர் கல்வியறிவு பெற்றிராத கிராமத்துப் பெண். அவருக்கு எனது தர்மம் குறித்து தெரியும். இவ்வாறாக எனது குழந்தைப் பருவத்திலிருந்து நமது தர்மம் என்ன என்பதை நாம் கற்றோமானால், அதனைப் பின்பற்ற முயற்சி செய்தோமானால், நமது உரிமைகள் தாமாகவே வந்து சேரும்... நமது கடமையை செய்யும்போதே, நமது உரிமைகள் நம்மை வந்து சேர்கின்றன என்பதுதான் இங்கே கவனிக்க வேண்டிய அம்சம். உரிமைகளைக் கடமைகளிலிருந்து பிரிக்க முடியாது. இவ்வாறுதான் சத்தியாக்கிரகம் பிறந்தது, ஏனெனில் எனது கடமை என்ன என்பதை முடிவு செய்ய நான் தொடர்ந்து முயற்சி செய்து கொண்டே இருந்தேன்” ”

1947 ஜுன் 28ஆம் தேதியில் தில்லியில் நடைபெற்ற பிரார்த்தனைக் கூட்டத்தில் அடிப்படை உரிமைகளின் முக்கியத்துவம் குறித்து மகாத்மா காந்தி

நமது அரசியல் சட்டத்தில் 11 அடிப்படை உரிமைகளை சேர்த்ததன் முக்கியக் காரணம், குடிமக்கள் தாங்கள் அனுபவிக்கும் விரிவான உரிமைகளுக்குப் பதிலாக, அவர்கள் கடமைகளைச் செய்ய வேண்டும் என வலியுறுத்துவதுதான்.

**மரியாதை, பெருமை, சகிப்புத்தன்மை, அமைதி, வளர்ச்சி, நல்லிணக்கம் ஆகிய முக்கிய நெறிகளில் அடிப்படைக் கடமைகள் கவனம் செலுத்துகின்றன**

1976ஆம் ஆண்டு அரசியல் சாசனத்தில் 42வது அரசியல் சாசன திருத்த சட்டமாக அறிமுகம் செய்யப்பட்ட அடிப்படை கடமைகள் நாட்டின் குடிமக்களுக்கான அடிப்படையான நன்னெறி மற்றும் கடமைகளை நிர்ணயிக்கின்றன.

**அடிப்படைக் கடமைகளைச் சேர்க்க வேண்டும் என்று பரிந்துரைத்த குழுவினர், குடிமக்கள் தங்களது கடமைகளை மறந்துவிடாமல் இருப்பதை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்தனர். அடிப்படை உரிமைகளைப் பயன்படுத்தும்போது, அவர்களது கடமையை மறந்துவிடக் கூடாது என்பதை உறுதி செய்ய நடவடிக்கைகள் தேவை**

குழந்தைகளுக்கு கல்வி வாய்ப்புகள் குறித்த 11-வது அடிப்படைக் கடமை அரசியல் சட்டத்தில் 86-வது திருத்தச் சட்டம் 2002 மூலம் சேர்க்கப்பட்டது.

அடிப்படை உரிமைகள் என்பதற்கான உத்வேகம் யு.எஸ்.எஸ்.ஆர், ஜப்பான் மற்றும் சீனாவின் அரசியல் சட்டங்களிலிருந்து பெறப்பட்டது.

இந்திய வாழ்க்கை முறையை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த கடமைகளின் குறியீடாக, நமது அடிப்படைக் கடமைகள் விளங்குகின்றன. இவை, ஒழுங்கு குறித்த உணர்வு, சமுதாயம் குறித்த உறுதிப்பாடு ஆகியவற்றை மேம்படுத்துகின்றன.

ஒவ்வொரு குடிமகனுக்கும், அரசியல் சட்டம் அடிப்படை உரிமைகளை வழங்கியுள்ள அதேசமயம் குடிமக்கள் ஜனநாயக அடிப்படை நெறிகளுடன் கூடிய நடத்தை போன்ற சில அடிப்படையான நெறிகளை கடைபிடிக்க கோருகிறது என்பதை அடிப்படைக் கடமைகள் தொடர்ந்து நினைவுபடுத்துகின்றன. ஏனெனில், உரிமைகளும் கடமைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புள்ளவை.

““ஜனநாயகம் என்பது அரசின் ஒரு வடிவம் மட்டுமல்ல... அது, சக குடிமக்களிடம் மரியாதை மற்றும் மதிப்பு ஆகியவற்றை கொண்டிருப்பது ஆகும்””

– டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்.


““ஒவ்வொரு இந்தியனும் இப்போது தான் ஒரு ராஜ்புத், ஒரு சீக்கியர், அல்லது ஒரு ஜாட் இனத்தவர் என்பதை மறக்க வேண்டும். தாம் ஒரு இந்தியர் என்பதை நினைவுகூர வேண்டும். ஒவ்வொருவருக்கும் அவரது நாட்டில் அனைத்து உரிமைகளும் உண்டு. ஆனால் சில கடமைகளும் உண்டு””

சர்தார் வல்லபாய் பட்டேல்

தீவிர பங்கேற்பு மூலம் தேசிய இலக்குகளை அடைய குடிமக்களின் அடிப்படைக் கடமைகள் நமக்கு உதவும்.

1999 அக்டோபர் மாதம் நீதிபதி வர்மா தலைமையில் அமைந்த குழு, “நாட்டின் குடிமக்களுக்கு அடிப்படை கடமைகளை கற்றுத்தருவது குறித்த ஆலோசனைகள்” என்ற அறிக்கையை சமர்ப்பித்தது.

# அரசியல் சட்டத்தில் பொதிந்துள்ள 11 கடமைகள் (பகுதி 4-ஏ, பிரிவு 51-ஏ)




அடிப்படை உரிமைகளை அரசியல் சட்டத்தில் சேர்த்தது, அவற்றை மனித உரிமைகள் பிரகடனத்தின் 29(1) பிரிவுடன் இணைக்கிறது.

“ உலக குடிமக்கள் கடமையை செய்யும்போதுதான், வாழ்க்கை வாழும் உரிமை நமக்கு கிடைக்கிறது. இந்த ஒரு அடிப்படை அறிக்கையிலிருந்துதான் ஆண், பெண் ஆகியோரின் கடமைகளை வரையறுப்பது எளிதாகிறது, ஒவ்வொரு உரிமையையும் சில தொடர்புடைய கடமையுடன் இணைக்க முடிகிறது. இதர உரிமைகள் அனைத்தும் சட்ட விரோதமாக கையில் எடுத்துக் கொள்ளப்பட்டவை என்பதை நிரூபிக்க முடியும். இவற்றுக்காக உழைக்க வேண்டிய அவசியமே இல்லை – மகாத்மா காந்தி”

மகாத்மா காந்தி.

## அடிப்படைக் கடமைகள் மற்றும் உரிமைகள் என்பவை ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள்

“கடமையின் ஆதாரம், உரிமை. நமது கடமைகளை செவ்வனே செய்தால், உரிமைகளைத் தேடி தொலைதூரம் செல்ல வேண்டியதில்லை” என்று மகாத்மா காந்தி கூறியிருக்கிறார்.

குடிமக்கள் தங்களது அடிப்படை உரிமைகளை அடிப்படைக் கடமைகளுடன் இணைக்காதவரை சமுதாயத்தில் ஜனநாயகம் வேரூன்ற முடியாது.

ஒவ்வொரு உரிமையும் அதனுடன் தொடர்புடைய கடமையை உள்ளடக்கியிருக்கிறது. ஒரு குடிமகன் தனது கடமையை செய்யும்பொழுது பிறரது உரிமைகள் உறுதி செய்யப்படுகின்றன.

நமது கடமைகளை செய்யும்போதுதான் நமது உரிமைகளுக்கு நாம் உரியவராகிறோம்.